தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1978 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

பிளவுக்கல் அணை

* 301 வினா—திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் சிற்றாற்றுக்கு குறுக்கே பிளவுக்கல் அணை கட்டியதால் ஏற்கனவே அந்த ஆற்றின் மூலம் பாசன வசதி பெற்றிருந்த கோவனேரி போன்ற கண்மாய் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா? அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தரையடித் தண்ணீர்

* 302 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் தரையடித் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவையின் முன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை பயன்படுத்தி அங்கே அருகாமையில் உள்ள பகுதிகளுக்கு பாசனம் அளிப்பதற்கு அங்குள்ள திட்டங்களை

** 130–ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.